பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 08 ஞாயிற்றுக்கிழமை 22.05.2022 கதிர் 91

## கேரள கஞ்சாவுடன் ஒருவர் சிக்கினார்!

450 கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கம்பஹா, சப்புகஸ்கந்த கோனவெல பிரதேசத்தில், பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போதே குறித்த நபர்

2

# 2024 வரை தேர்தல் இல்லை; கோட்டா - ரணில் அரசு திட்டம்

## பொருளாதார மீளெழுச்சிக்கே முன்னுரிமை



இலங்கையில் 2024ஆம் ஆண்டு வரை எந்தவொரு தேர்தலையும் நடத்தாமல் இருக்க கோட்டாபய - ரணில் தலைமையிலான அரசு திட்டமிட்டுள்ளது என அறியமுடிகின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட விடயங்களைக் கருத்தில்கொண்டே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி அடுத்த வருடம் முழுவதுமாக பொருளாதார மீளெழுச்சிக்கான திட்டங்களுக்கு முன்னுரிமையளித்து செயற்படவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2

## 'மே - 9' வன்முறை; 1,500 பேர் கைது!

நாட்டின் பல இடங்களில் கடந்த ஒன்பதாம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் நாடளாவிய ரீதியில் இதுவரை 1,500 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்துள்ளார்.

கைதானவர்களில் 677 பேர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த சம்பவங்கள் தொடர்பில், இதுவரையில் 844 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

## ஹரீன், மனுஷவின் செயல் மிகவும் அருவருக்கத்தக்கது

### போட்டுத் தாக்குகின்றார் சஜித்

எமது கட்சியின் தீர்மானத்தை மீறி அரசு பக்கம் சாய்ந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்ட ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். இவர்களின் இருவரினதும் இந்தச் செயற்பாடு மிகவும் அருவருக்கத்தக்கது.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

2



## ஏறாவூர் வன்முறை சம்பவங்களில் பரீட்சை எழுதும் மாணவனும் கைது!

மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூரில் ஹாபீஸ் நஸீர் அஹமட் எம்.பியின் காரியாலயம், எம்.பியின் வீடு, உறவினரின் வீடு, ஹோட்டல், கடை தீவைப்பு மற்றும் ஆடைத்தொழிற்சாலையை உடைத்து சோதப்படுத்திய சம்பவங்கள் தொடர்பாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட 16 வயது சிறுவன் ஒருவர் உட்பட 15 பேரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த 9ஆம் திகதி இரவு ஹாபீஸ் நஸீர் அஹமட்டின்

2

## இரண்டு கோடி ரூபா பொருள்களுடன் யாழில் கடை முற்றாக எரிந்து நாசம்!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் - ஸ்ரான்லி வீதியில் உள்ள பிளாஸ்ரிக் விற்பனை நிலையம் இன்று காலை தீப்பற்றியதில் 2 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பொருள்களுடன் முற்றாக எரிந்து சாம்பலானது.

பிளாஸ்ரிக் கடையின் பிற்பகுதியில் இன்று அதிகாலை 2 மணியளவில் ஏற்பட்ட தீ முழுமையாகப் பரவியதால் 2 கோடி ரூபா பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகின.

இவ்வாறு தீயில் அகப்பட்ட கடையில் நான்கு பேர் படுத்துறங்கிய அதேநேரம் நேர் எதிரே நாடாளுமன்ற

2

## வாள்வெட்டுக் கும்பலில் ஐவர் வசமாக மாட்டினர்!

வன்முறைக் கும்பல் ஒன்றைச் சேர்ந்தவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய கும்பலைச்சேர்ந்த 5 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

திருட்டு மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்தியே இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை நேற்று முன்னெடுத்தனர்.

கடந்த 17ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் சண்டிலிப்பாய் - தொட்டிலடிச் சந்தியில் வாள்வெட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

சம்பவத்தில் அளவெட்டியைச் சேர்ந்த ஏ. ரதீஸ்வரன் (வயது - 37) என்பவர் தலையில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பித்தனர்.

2

## குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுப் படுகொலை!

துப்பாக்கிச்சூட்டில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குருநாகல் - மாவத்தகம, பரகஹதெனிய பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

பரகஹதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

2

## நெருக்கடிகளுக்கு மத்தியில் O/L பரீட்சை நாளை ஆரம்பம்

நாட்டில் நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பரீட்சை எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

குறித்த பரீட்சை 3 ஆயிரத்து 844 பரீட்சை நிலையங்களிலும், 542 இணைப்புமத்திய நிலையங்களிலும் நடைபெறவுள்ளது.

இந்த முறை பரீட்சைக்கு 4 இலட்சத்து 7 ஆயிரத்து 129 பாடசாலை பரீட்சார்த்திகளும், 11 ஆயிரத்து 367 தனியார் பரீட்சார்த்திகளும் அடங்கலாக 5 இலட்சத்து 17 ஆயிரத்து 496 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

கொரோனாத் தொற்று உறுதியான பரீட்சார்த்திகள் தோற்றுவதற்கு விசேட பரீட்சை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

2

## வாள்வெட்டுக் கும்பலில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கீழான மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதனடிப்படையில் கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த இருவர், தெல்லிப்பழையைச் சேர்ந்த இருவர் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் என 5 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்கள் வடமராட்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் திருடப்பட்டவை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## இரண்டு கோடி ரூபா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகமான சிறிதர் திரையரங்கின் பாதுகாப்புக்கு 4 இராணுவத்தினர், பொலிஸார் பாதுகாப்புப் பணியில் இருந்த வேளை இந்தத் தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

கடையில் தீ பரவியபோது பொருள்களை மீட்க முயற்சித்த ஊழியர் ஒருவரும் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தீ பரவிய சமயம் வெளியில் ஓடி வந்த போது தீ வீதிவரை பரவி விட்டது. இதன் பின்பு யாழ். மாநகர சபையின் தீயணைப்புச் சேவைக்குத் தகவல் வழங்கப்பட்டபோது தீயணைப்பு வாகனம் வந்த போதும் தீயை அணைக்க முடியவில்லை என்று காயமடைந்த ஊழியர் தெரிவித்தார்.

## குடும்பஸ்தர் ஒருவர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படாத நிலையில், மேலதிக விசாரணைகளை மாவத்தகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## நெருக்கடிகளுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தப் பரீட்சைக்கு 590 விசேட தேவையுடையவர்களும் தோற்றவுள்ளனர்.

இந்தநிலையில், பரீட்சைக்குத் தேவையான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் எல்.எம்.டி தர்மசேன தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் பரீட்சார்த்திகள் தங்களது பரீட்சைக்குரிய ஆவணங்களைத் தயார் நிலையில் வைத்துக்கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார்.

இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத தனியார் பரீட்சார்த்திகள் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

இதேவேளை, ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் மற்றும் பரீட்சை பணிக்குழாமினர் பரீட்சை மண்டபங்களுக்குச் செல்வதற்காக விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் சாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் மற்றும் பணிக்குழாமினரின் வாகனங்களுக்கான டீசலை விநியோகிக்கும் பணிகள் தற்போது இடம்பெறுகின்றன.

அத்துடன் வரிசைகளில் காத்திருக்காது நாடளாவிய ரீதியாகவுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு வழங்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பொதுமக்களைக் கோரியுள்ளார்.

பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் உரிய ரயில் சேவைகள் இடம்பெறும் என்று ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை இடம்பெறும் நாள்களில் வீதியை மறித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## ஹரீன், மனுஷவின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் நல்ல கருமங்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிரணியில் இருந்துகொண்டு ஆதரவு வழங்கும் எனவும், அமைச்சுப் பதவிகளை ஏற்பதில்லை எனவும் நாம் ஏற்கனவே முடிவெடுத்திருந்தோம். இந்நிலையில், ஹரீன் பெர்னாண்டோவும், மனுஷ நாணயக்காரவும் எமது கட்சியின் முடிவை மீறிச் செயற்பட்டுள்ளதால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

எமது கட்சியிலிருந்து உறுப்பினர்களை அரசு பக்கம் எடுத்தால் எமது ஆதரவை வாபஸ் பெறுவோம் எனவும் நாம் ஏற்கனவே தீர்மானித்திருந்தோம். இந்நிலையில், ஹரீனுக்கும், மனுஷவுக்கும் அமைச்சுப் பதவிகளை அரசு வழங்கியுள்ளதால் அரசுக்கான எமது ஆதரவு தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி கூடி பரிசீலிக்கும்.
- என்றார்.

## 2024 வரை தேர்தல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளை, நட்பு நாடுகளின் ஒத்துழைப்புகளை வலுவாகப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்தியா மற்றும் மேற்குலக நாடுகள் சிலவற்றுக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

முதல் விஜயமாக இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாதம் முற்பகுதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செல்லவுள்ளார்.

## கேரள கஞ்சாவுடன் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைதுசெய்யப்பட்டுள்ளார். பதுளைப்பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது கேரள கஞ்சா அடங்கிய 250 பொதிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஏறாவூர் வன்முறைச் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏறாவூர் பிரதான வீதியிலுள்ள காரியாலயம், வீடு, அவரது உறவினாரின் வீடு, ஹோட்டல், கடை என்பன தீக்கிரையாக்கியதுடன் 3 ஆடைத் தொழிற்சாலைகள் முற்றுகையிடப்பட்டு சேதமாக்கப்பட்டன.

இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்காவின் ஆலோசனைக்கமைய மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வந்த விசாரணையில் நேற்று ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த நாளை திங்கட்கிழமை ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 16 வயது சிறுவன் உட்பட 15 பேர் இது வரை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதில் நேற்று கைதுசெய்யப்பட்ட சிறுவனை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது அவரை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சை நிலையத்துக்குக் கொண்டுசென்று பரீட்சை எழுத அனுமதிக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக ஹோட்டல் கடையில் இருந்து கொள்ளையிடப்பட்ட பொருள்களுடன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் 14 பேரைக் கைது செய்து ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.


விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம்- 076 443 8622









**மணமகன் விபரம்**

**பிறந்த திகதி :** 10.06.1987
**ஜாதி:** V ஆண்
**மதம் :** இந்து
**கல்வி தகைமை:** Msc Engineer
**எதிர்பார்ப்பு :** கனடா அல்லது அவுஸ்திரேலியா மணமகள்

**பிறந்த திகதி :** 26.09.1990
**ஜாதி:** N ஆண்
**மதம் :**இந்து
**நட்சத்திரம் :** திருவோணம் 2 ல் செவ்வாய்
**கல்வி தகைமை :** Bsc **தொழில் :** அரச உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு : அழகான மணமகள்

**பிறந்த திகதி:** 11.08.1994
**ஜாதி:** P செவ்வாய் குற்றமுடையவர்
**எதிர்பார்ப்பு:** ஒரே குலத்தை சேர்ந்த அழகிய மணமகள்

**பிறந்த திகதி:** 1981.04.25
**ஜாதி:** V ஆண்
**மதம் :** இந்து
**கல்வி தகைமை :** A/L
**தொழில்:** சொந்த தொழில்
**எதிர்பார்ப்பு :** ஐரோப்பிய நாட்டு இலங்கை தமிழ் பெண்

**மணமகள் விபரம்**

**பிறந்த திகதி :** 27.12. 1989
**மதம் :** இந்து
**ஜாதி :** V பெண் செவ்வாய் குற்றமுடையவர்
**கல்வி தகைமை :** MBA
**தொழில்:** கனடா பிரஜை
**எதிர்பார்ப்பு :** கனடா மணமகன்

**பிறந்த திகதி :** 3.11.1995
**மதம் :** இந்து
**ஜாதி :** V பெண்
**கல்வி தகைமை:** University
**எதிர்பார்ப்பு :** வெளிநாட்டு மணமகன்

**பிறந்த திகதி :** 01.01.1992
**மதம் :** இந்து .
**ஜாதி :** Pபெண்
**கல்வி தகைமை:** NCAT.
**எதிர்பார்ப்பு :** உள்ளூர் அரச சேவை மணமகன்

**பிறந்த திகதி :** 17.05.1998
**மதம் :** இந்து .
**ஜாதி ::**P பெண் செவ்வாய் குற்றமுடையவர்
**கல்வி தகைமை:** AL
**எதிர்பார்ப்பு :**உள்நாடு - வெளிநாட்டு மணமகன்

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அடிமை யாப்பின் ஐம்பதாம் ஆண்டு

இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமான தினம் இன்று. ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இந்தத் தினத்தில்தான் – 1972 மே 22 இல்தான் – இந்த நாட்டின் பின்னாள் களேபரங்களுக்கு எல்லாம் வித்திடப்படும் விடயம் அரங்கேறியது.

ஆம். இந்தத் தினத்தில்தான் இலங்கையின் புதிய குடியரசு அரசமைப்பு ஒன்று தன்பாட்டில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. கொலனித்துவ நாடான இலங்கைத் தீவு, இந்த நாளில்தான் தன்னை தன்பாட்டில் குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்திக் கொண்டது. பிரித்தானியா அரசு நியமிக்கும் கவர்னர் ஜெனரலின் கீழிருந்த ஆட்சி முறைமை கைவிடப்பட்டது. நாட்டின் அரசுத் தலைவராக வில்லியம் கோபல்லாவ ஜனாதிபதிப் பதவியை ஏற்றார். குடியரசு நாட்டின் நிறைவேற்று அதிகாரமும் கொண்ட முதல் பிரதமரானார் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா.

புதிய குடியரசு அரசமைப்பை உருவாக்கிய தேசிய அரசுப் பேரவை நாட்டின் ஏழாவது நாடாளுமன்றமாக மாறியது.

சுதந்திர இலங்கையின் முதல் யாப்பில் சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து உறுதி செய்யும் வகையில் இருந்த 29 ஆவது சரத்தை ரத்துச் செய்து சிறுபான்மையினரை இந்தத் தீவில் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கி, அடிமைப்படுத்தும் முதலாவது குடியரசு அரசமைப்பு நடைமுறைக்கு வந்து இன்றுடன் 50 ஆண்டுகளாகின்றன.

இலங்கைத் தீவில் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினை கூர்மையடைந்து, பெரும் இனப் போராக – உள்நாட்டு யுத்தமாக – வெடித்து அடுத்த மூன்று தசாப்தங்களுக்கு இங்கு இரத்த ஆறு ஓடுவதற்கான கால்கோள் இடப்பட்ட அடையாள தினம் இதுதான்.

1972 மே 22 இல் கொண்டுவரப்பட்ட இந்த குடியரசு அரசமைப்பு, அதற்கு முந்தி இருந்த சுதந்திர இலங்கையின் அரசமைப்புக்கு உட்பட்டு, அதிலுள்ள விதிமுறைகளுக்கு அமைய, முன்னெடுக்கப்பட்டது அல்ல. அந்தப் பழைய யாப்பின் சட்டக் கடப்பாடுகளைத் தூக்கிக் கடாசிவிட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்தை தன்பாட்டில் ஒரு தேசிய அரசியல் நிர்ணய சபையாக மாற்றி, அந்த நிர்ணய சபையினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு யாப்பை நாட்டின் மீது பலவந்தமாக – அதிகாரம் மூலம் – திணிக்கும் ஓர் அராஜகப் போக்கு, அப்போதைய ஆட்சியாளர்களால் இந்த தினத்தில்தான் நிறைவேற்றப்பட்டது.

ஆகவே ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்தத் தினத்தில் கொண்டுவரப்பட்ட யாப்பு, அதற்கு முந்திய யாப்பின் சட்டரீதியான தொடர்ச்சியல்ல. நடைமுறையில் சட்டரீதியாக நடைமுறையில் இருந்த முன்னைய யாப்பை வல்வந்தமாகத் தடைசெய்து, புதியதை அதிகாரம் மூலம், கட்டாயமாகத் திணித்த நடவடிக்கைதான் இது. இந்த ஜனநாயக விரோத – சட்ட விரோத – நடவடிக்கையை ஜனநாயக நடவடிக்கையாகக் காட்டவிழைந்தார் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா. அவ்வளவுதான்.

இலங்கைத் தீவில் தனித் தேசத்துக்குரிய சகல அடிப்படைகளையும், கட்டமைப்புகளையும் கொண்டு வாழும் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை – வடக்கு, கிழக்கைத் தமது தாயக தேசமாகக் கொண்டு, இங்கு நிலைபெற்றிருக்கும் பாரம்பரிய தமிழர்களைப் பொறுத்தவரை – இந்தப் புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் அவர்கள் பங்குபற்றவில்லை. அவர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்படவில்லை. பின்னாளில் கொண்டுவரப்பட்ட – அதாவது 1978ஆம் ஆண்டின் அரசமைப்பு போல – அதாவது 1972இல் – ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இதே தினத்தில் கொண்டுவரப்பட்ட அந்தக் குடியரசு யாப்பும் தமிழர்கள் மீது திணிக்கப்பட்டதே. அவர்களை அடிமைகளாக உறுதிப்படுத்திய விதத்தில் அவர்கள் மீது திணிக்கப்பட்ட அரசமைப்புகளில் இதுவும் ஒன்று. அவ்வளவுதான்.

# இலங்கையின் நெருக்கடி நிலை தொடர்பில் ஐ.நா. அவதானம்

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கானவதிவிடஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்று (சனிக்கிழமை) எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

தற்போது இலங்கை முகங்கொடுத்திருக்கும் நெருக்கடி நிலைவரத்திலிருந்து மீட்டெடுப்பது, அதற்குத் தேவையான மூலோபாய மற்றும் தந்திரோபாய ரீதியான ஆதரவைப்பெறுதல்உள்ளிட்டவிவகாரங்கள் தொடர்பாகஎதிர்க்கட்சித்தலைவர் இதன்போது அவருடன் நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளார்.

## மைனா கோ கம, கோட்டா கோ கம தாக்குதல்கள்; பாதாளகுழு உறுப்பினரின் சகோதரர் 'சதா நாலக' கைது!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கத்தை பதவி விலகக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டு வந்த அமைதி போராட்டக்காரர்கள் மீது ஆளும் கட்சி ஆதரவாளர்கள் என்று கூறப்படுபவர்கள் மூர்க்கத்தனமாக நடத்திய தாக்குதலின் போது, போராட்டக் காரர் ஒருவரின் தலையில் இரும்பு கம்பியால் தாக்கினார் எனக் கூறப்படும் ஒருவரை சி.ஐ.டியினர் நேற்று (சனிக்கிழமை) கைது செய்துள்ளனர்.

பாதாள உலக உறுப்பினர் ஒருவரின் சகோதரர் என அறியப்படும் 'சதா நாலக' எனும் நபரையே இவ்வாறு சி.ஐ.டியினர் நேற்று ஹோகந்தர பகுதியில் மறைந்திருந்த போது கைது செய்துள்ளனர்.

குறித்த நபர், 9 ஆம் திகதி கோட்டா கோ கம மீதான தாக்குதலின் போது அரசாங்க ஆதரவாளர்களுடன் ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிள் ஒன்றில் காலி முகத்திடலுக்குள் புகுந்துள்ளார் என சி.ஐ.டி. விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதற்கு முன்னர் சந்தேக நபர், மிரிஹானையில் ஜனாதிபதி இல்லத்துக்கு அருகே நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது, இராணுவ பஸ்ஸை செலுத்தி வந்து ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு குறுக்காக நிறுத்தியுள்ளமை தொடர்பிலும் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் நாடாளுமன்ற சுற்று வட்டம் அருகே மே 5 ஆம் திகதி நடந்த ஆர்ப்பாட்டத்தின் போதும், சந்தேக நபர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக அங்கு சென்று கோஷங்களை எழுப்பியுள்ளமை தெரிய வந்துள்ளது. இந்த நிலையில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடம் சி.ஐ.டியினர் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# எரிவாயு விநியோகத்தை அறிவதற்கு லிற்றோ நிறுவனத்தால் புதிய செயலி!

லிற்றோ எரிவாயு நிறுவனம் மூலம் நாளை (திங்கட்கிழமை) முதல் எரிவாயு விநியோகம் தொடர்பான சகல தகவல்களையும் வழங்குவதற்காக புதிய செயலி ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக லிற்றோ நிறுவனத்தின் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

லிற்றோ எரிவாயு விநியோகம் மற்றும் எரிவாயு கிடைக்கும் இடங்கள் தொடர்பாக நுகர்வோர் மற்றும் முகவர்களுக்கு தகவல்கள் வழங்கும் வகையில் லிற்றோ எரிவாயு நிறுவனம் மொபைல் செயலி அறிமுகப்படுத்த உள்ளது.

இந்த செயலியை நாளை (திங்கட்கிழமை) தொடக்கம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

அதன்படி, கையடக்க தொலைபேசி மூலம் நுகர்வோர், முகவர்கள் மற்றும் துணை முகவர்கள் தகவலைப் பெற முடியும்.

வரிசையில் நிற்பதற்கு முன் வாடிக்கையாளர்கள் தங்களுக்கு வழங்கப்படும் எரிவாயு சிலிண்டர்களின் திகதி மற்றும் எண்ணிக்கைகள் தொடர்பாக அந்த பகுதி முகவர்களிடம் கேட்டு தகவல்களை தெரிந்து கொள்வதற்கு முடியும் என்றும் நிறுவனத்தின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடலில் படகுச்சவாரி ஆரம்பம்






யாழ்ப்பாண நகர் மத்தியில் அமைந்துள்ள ஆரியகுளம், யாழ்.மாநகர சபையால் புனரமைக்கப்பட்டு, குளத்தை சூழவுள்ள பகுதிகள் அழகாக்கப்பட்டு 'ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல்' என்ற பெயரில் திறந்து வைக்கப்பட்டது. அதனையடுத்து அப்பகுதிக்கு பெருமளவான மக்கள் தமது பொழுதைக் கழிப்பதற்காக அதிகளவில் வந்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்நிலையில், ஆரிய குளத்துக்கு வருகை தரும் மக்களை மகிழ்விப்பதற்காக படகு சவாரி முறையும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அதன் ஆரம்ப நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். மேலும், மாநகர ஆணையாளர் வ.ஜெயசீலன் உள்ளிட்ட மாநகர உறுப்பினர்கள், ஊர்மக்கள் பலரும் இதன்போது கலந்து கொண்டனர்.

# கனடாவை உலுக்கிய கடும் புயலுக்கு 4 பேர் சாவு



## 9 லட்சம் வீடுகளில் மின்சாரம் துண்டிப்பு

கனடாவின் கிழக்கு மாகாணங்களில் தாக்கிய புயல் காரணமாக பல்வேறு பகுதிகளில் மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் சாய்ந்தன.

கனடாவின் கிழக்கு மாகாணங்களான ஒன்டாரியோ மற்றும் கியூபெக் மாகாணங்களில் நேற்று கடுமையான புயல் தாக்கியது. இடி மின்னலுடன் பலத்த மழையும் பெய்தது.


இதன் காரணமாக பல்வேறு பகுதிகளில் மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் சாய்ந்தன. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. சுமார் 9 லட்சம் வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருளில் மூழ்கியது. புயல், மழை தொடர்பான விபத்துகளில் 4 பேர் பலியாகினர். பலர் காயமடைந்துள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணிகள் நடைபெறுகின்றன.

## ஆஸ்திரேலியா தேர்தலில் லிபரல் கட்சி தோல்வி

# பிரதமர் பதவியை இழக்கிறார் மோரிசன்



ஆஸ்திரேலியா பொதுத்தேர்தலில் பிரதமர் ஸ்காட் மோரிசன் தோற்றார். ஆஸ்திரேலியாவில் பொதுத்தேர்தல் நேற்று நடைபெற்றது. இதில் லிபரல் கட்சி தலைவரும், பிரதமருமான ஸ்காட் மோரிசனுக்கும், எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி தலைவர் அந்தோனி ஆல்பனிஸ் இடையே கடுமையான போட்டி நிலவியது. மொத்தமுள்ள 151 எம்.பி. இடங்களில் லிபரல் கட்சி கூட்டணி 52 இடங்களையும், தொழிலாளர் கட்சி 72 இடங்களையும் கைப்பற்றி உள்ளன. வெற்றி பெற 76 இடங்கள் தேவை என்ற நிலையில், 72 இடங்களை தொழிலாளர் கட்சி கைப்பற்றியதன் முலம், அல்பானிஸ் புதிய பிரதமராக பொறுப்பேற்பது உறுதியாகியுள்ளது. தனது தோல்வியை ஸ்காட் மோரிசன் ஒப்பு கொண்டுள்ளார்.



# ஜப்பானில் இபராக்கி மாகாணத்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்


## ஜப்பான் வானிலை ஆய்வு நிறுவனம் தகவல்

ஜப்பானில்இபராக்கிமாகாணத்தில் அந்நாட்டு நேரப்படி பகல் 12.24க்கு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

30 கி.மீ. தூரத்தில் மாயம் கொண்டிருந்த நீலநடுக்கமானது 5.8 ரிக்டரில் ஆக பதிவாகி உள்ளது. நிலநடுக்கம் இபராக்கி மற் றும் புகுஷிமா மாகாணங்களில் உணரப்பட்டதாக ஜப்பான் வானிலை ஆய்வு நிறுவனம் தகவல் தெரிவித்துள்ளது.

## சிகாகோவில் மர்ம நபர்

# துப்பாக்கிச் சூடு 2 பேர் உயிரிழப்பு



அமெரிக்காவின் மிகப் பெரிய நகரங்களில் ஒன்றான சிகாகோவில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் உயிரிழந்தனர். 8 பேர் படுகாயம் அடைந்தனர். சிகாகோ நகரின் மாக்னி பிசென்ட் மைல் ஷாப்பிங் மாவட்டத்தின் வடக்குப் பகுதியில் உள்ள மெக்டொனால்டு உணவகம் ஒன்றில் வாசலில் நேற்று இரவு 2 பிரிவினர்கள் இடையே தகராறு ஏற்பட்டது. அப்போது திடீரென ஒருவர் துப்பாக்கியை எடுத்து கண்ணில்பட்டவர்களை எல்லாம் சரமாரியாக சுட்டார். இதில் குண்டு பாய்ந்து நிகழ்விடத்திலேயே 2 பேர் உயிரிழந்துவிட்டனர்.

படுகாயம் அடைந்த 8 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்புகள் அதிகரிக்கும் என்று மருத்துவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்து வந்த சிகாகோ பொலிஸார் தீவிர விசாரணைக்கு பிறகு இளைஞர் ஒருவரை கைது செய்தனர். துப்பாக்கிச் சூடு நடைபெற்ற இடத்தில் கைதுப்பாக்கி ஒன்றை பறிமுதல் செய்த பொலிஸார் பிடிபட்ட இளைஞரிடம் தீவிர விசாரணை செய்து வருகின்றனர். கைது செய்யப்பட்ட நபர் குறித்த தகவல்களை பொலிர் உடனடியாக வெளியிடவில்லை.



# உக்ரைனில் மேற்கத்திய நாடுகளின் ஆயுதங்களை அழித்துவிட்டதாம்

## ரஷ்யா தெரிவிப்பு

உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதலை தொடங்கிய பின்னர் மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு ஆயுத விநியோகத்தை தீவிரப்படுத்தின.

உக்ரைனின் ஜிடோமிர் பிராந்தியத்தில் மேற்கத்திய நாடுகள் வழங்கிய ஏராளமான ஆயுதங்களை அழித்துவிட்டதாக ரஷ்யா ராணுவம் கூறி உள்ளது. கப்பலில் இருந்து ஏவப்படும் காலிபர் ஏவுகணைகள் மூலம் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து அனுப்பப்பட்ட ஆயுதங்கள் மற்றும் ராணுவ உபகரணங்கள் மொத்தமாக வைக்கப்பட்டிருந்த இடத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதாக ரஷ்யா பாதுகாப்பு அமைச்சகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதலை தொடங்கிய பின்னர் மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு ஆயுத விநியோகத்தை தீவிரப்படுத்தியது.

ரஷ்யா ராணுவம் அந்த ஆயுதங்கள் வரும் வாகனங்களை இடைமறித்து அழிக்க முயற்சிக்கிறது.

உக்ரைனுக்கு மேற்கத்திய நாடுகள் ஆயுதங்கள் வழங்குவது மற்றும் ரஷ்யாவுக்கு எதிராக கடுமையான பொருளாதார தடைகள் விதிப்பது போன்ற நடவடிக்கைகள், அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளின் மறைமுக போருக்கு சமம் என்று ரஷ்யா கூறுகிறது.

# ஆஸ்திரேலிய நாட்டின் புதிய பிரதமராகிறார் அந்தோனி ஆல்பனீஸ்

ஆஸ்திரேலிய நாட்டின் புதிய பிரதமராக அந்தோணி ஆல்பனீஸ் தேர்வு செய்யப்படவுள்ளார். தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த அந்தோணி ஆல்பனீஸ் ஆஸ்திரேலியாவின் 31வது பிரதமராக தேர்வாக உள்ளார். பிரதமராக இருந்த மாரிசன் தேர்தலில் தோல்வி அடைந்த நிலையில் அந்தோணி ஆல்பனீஸ் தேர்வு செய்யப்படவுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சிறையில் உள்ள ஆறு பேர் விடுதலை; தமிழக முதல்வர் ஸ்டாலின் ஆலோசனை

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வந்த பேரறிவாளனை விடுதலை செய்வதாக உச்ச நீதிமன்றம் சமீபத்தில் அதிரடித் தீர்ப்பை வழங்கியது.

ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை பெற்ற பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரையும் விடுதலை செய்வது தொடர்பாக தமிழக அமைச்சரவைத் தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால், அந்தப் பரிந்துரை மீது முடிவெடுப்பதில் ஆளுநர் நீண்ட காலம் தாமதம் செய்தார். இதனைச் சுட்டிக்காட்டிய உச்ச நீதிமன்றம், அரசமைப்புச் சட்டத்தின் 142 ஆவது பிரிவின் கீழ் தங்களுக்கு உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி பேரறிவாளனை விடுதலை செய்துள்ளது.

பேரறிவாளன் விடுதலையைத் தொடர்ந்து மற்ற 6 பேரையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியிருந்தார்.

இந்த நிலையில் உதகையில் இருந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாக சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இதன்போது ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள மற்ற 6 பேரை விடுதலை செய்வது தொடர்பாக ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆலோசனையில் அமைச்சர்கள் துரைமுருகன், ரகுபதி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, தமிழக அரசுத் தலைமை வழக்கறிஞர் உட்பட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.



## சென்னையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கக் கூட்டம் அனுமதியின்றி நடத்தினர் என அனைவரும் கைது



சென்னை தி.நகர் பென்ஸ்பார்க் ஹோட்டலில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அமர்வு கூட்டம் நேற்று நடைபெற திட்டமிடப்பட்டிருந்தது. அங்கு கடைசி நிமிடத்தில் அனுமதி மறுக்கப்பட்டதால் மயிலாப்பூரில் உள்ள திராவிடர் விடுதலை கழக அலுவலகத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. 50க்கும் மேற்பட்ட ஈழத்தமிழ் ஆதரவாளர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர். இந்நிகழ்வு தமிழகத்தில் முதல்முறையாக நடைபெற்றது.

உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் ஈழத்தமிழர்கள் இணைய வழியாக கூட்டத்தில் பங்கேற்றனர். ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வாழ்த்துரை வழங்கினார். நிகழ்வில் உரையாற்றிய வைகோ, 2009 மே 16 ஆம் நாள் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை மௌனிக்கிறோம் என்று சொன்னார்கள். வழிமுறைகளை மாற்றுகிறோம் என்று தேசியத் தலைவர் பிரபாகரன் சொன்னார். அப்படியான மாற்று முறைதான் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்.

ஓர் அரசு இப்படித்தான் இருக்க வேண்டும் என்று முன்மாதிரியான ஒரு அரசாக பிரபாகரனின் அரசு இருந்து வந்தது. ஆனால், லட்சக்கணக்கான ஈழத்தமிழர்கள் இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்டார்கள். இதற்கு நீதி வேண்டும். ஈழத்தில் பொது வாக்கெடுப்பு நடத்தப்படுவது மட்டுந்தான் ஈழத்தமிழர்களுக்கு நீதியை பெற்றுத் தரும். இதை ஆரம்பம் முதல் சொல்லி வருபவன் நான் மட்டுந்தான் என்ற பெருமிதம் எனக்கு உண்டு.

சுதந்திர தமிழீழம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது. ஆனால், வல்லரசு நாடுகள் தங்கள் சுயலாபத்திற்காக சிங்களர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்து ஈழம் அமையாமல் தடுக்கிறார்கள். ஆயுதமின்றி தமிழ் ஈழம் அமைந்தே தீரும். முத்துக்குமார் உள்ளிட்ட 18 பேர் தங்களைத் தீயில் தள்ளிக்கொண்டு ஈழத்திற்காக மாண்டார்கள். தமிழீழ விடுதலைக்கு எந்தெந்த வகையில் பக்க பலமாக இருக்க வேண்டுமோ அந்தந்த வகையில் பலமாக இருப்போம். சுதந்திர தமிழீழம் அமைய பாடுபடுவோம், என்று குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தை நடத்த அனுமதி வழங்கப்படவில்லையென மயிலாப்பூர் பொலிஸ் உதவி ஆணையர் தெரிவித்ததன் அடிப்படையில் நிகழ்வைத் தொடர்ந்து நடத்த பொலிஸார் எதிர்ப்பு தெரிவித்தனர். இருப்பினும் எதிர்ப்பை மீறி கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

இதையடுத்து தமிழ்தேசிய விடுதலை இயக்க பொதுச் செயலாளர் தியாகு, தமிழ் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த செந்தில் உள்ளிட்ட கூட்டத்தில் பங்கேற்றவர்களை பொலிஸார் கைது செய்தனர். ஜனநாயக உரிமையை மறுத்து அராஜத்தில் ஈடுபடுகின்றனர் எனக பொலிஸாரை கண்டித்து கைது செய்யப்பட்டவர்கள் முழக்கமிட்டனர்.

## பெற்றோல், டீசல் மீதான கலால் வரி குறைப்பு

### அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவிப்பு



பெற்றோல் விலை லீற்றருக்கு 9.50 ரூபாவினாலும், டீசல் விலையை லீற்றருக்கு 7 ரூபாவினாலும் குறைத்து இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித் துள்ளார்.

இது குறித்து மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், பெற்றோல் மீதான மத்திய கலால் வரி லீற்றருக்கு 8 ரூபாவும், டீசல் மீதான கலால் வரி லீற்றருக்கு 6 ரூபாவும் குறைக்கப்படுகிறது. இதன் எதிரொலியால், பெற்றோல் லீற்றருருக்கு 9.50ரூபாவும், டீசல்லீற்றருக்கு 7 ரூபாவும் விலை குறையும், என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## பெற்றோல் விலையைக் குறைத்த பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி

### பா.ஜ.கவின் தமிழகத் தலைவர் அண்ணாமலை டுவீட்



பெற்றோல் மற்றும் டீசல் மீதான கலால் வரிகளைக் குறைத்து இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்திருந்தார். இதனால், அவற்றின் விலைகள் குறையும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக, தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித் துள்ளார். இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருக்கிறார்.

மீண்டும் பெற்றோல், டீசல்விலைகளைக் குறைத்த மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நன்றி. கண்டும் காணாமல், கேட்டும்கேட்காமல், மக்கள் நலன் கருதாத எதிர்க்கட்சிகள், குறிப்பாக தி.மு.க. அரசு இந்த முறையாவது குறைக்குமா? என தமிழக மக்கள்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்!, என்று தனது பதிவில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

## பாகிஸ்தான் பெண் உளவாளியிடம் ரகசியங்களை கசியவிட்ட இந்திய இராணுவ வீரர் கைதாகினார்!

இராணுவ ரகசியங்களைப் பாகிஸ்தான் பெண் உளவாளியுடன் பகிர்ந்த குற்றத்திற்காக இந்திய இராணுவ வீரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள், பாதுகாப்பு அமைச்சகத்தை சேர்ந்த அதிகாரிகள், முக்கிய ரகசியங்களை கையாள்பவர்கள் போன்றவர்களின் பலவீனங்களைப் பயன்படுத்தி, பாகிஸ்தான் உளவுத்துறையான ஐ.எஸ்.ஐ. தங்களது வலையில் சிக்க வைத்து ரகசியங்களை பெற்று வருவதாக அவ்வப்போது குற்றச்சாட்டுகள் எழுவது வழமை.

இவ்வாறு இராணுவ ரகசிய தகவல்களை பகிர்ந்து கொண்டதற்காக ராணுவ வீரர் ஒருவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பணியில் இணைந்து கொண்ட உத்தரகாண்ட் மாநிலத்தைச் சேர்ந்தவரும் ஜோத்பூரில் துப்பாக்கி ஏந்திய காவல் பிரிவில் பணியாற்றியவருமான பிரதீப் குமார் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். பாகிஸ்தானை சேர்ந்த பெண்ணொருவர் தன்னை பெங்களூரில் ராணுவ தாதிப்பிரிவு ஊழியர் என அடையாளப்படுத்திக் கொண்டு, இந்த இராணுவ வீரரோடு நட்பாகியிருக்கிறார். குமாரை டெல்லியில் சந்திக்க விரும்புகிறேன் என கூறி, அவரை மயக்கி திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன் எனவும் தெரிவித்திருக்கிறார்.

அந்த பெண் பாகிஸ்தான் உளவுத்துறையின் பெண் முகவர் என்பதை அறியாமல், அவரிடம் பழகி வந்த இந்திய இராணுவ வீரர் குமாரை தன்னுடைய வலையில் சிக்க வைத்து, அவரை ஏமாற்றி, சமூக ஊடகங்கள் மூலம், ரகசியத் தகவல்கள் மற்றும் ஆவணங்களைப் பற்றி விவரங்களை பெற்றுள்ளார் என கூறப்படுகிறது.

அந்த ராணுவ வீரர் பாகிஸ்தான் முகவருடன் பேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் மூலம் தொடர்பு கொண்டு ரகசியதகவல்களைஅவருடன்பகிர்ந்துகொண்டிருந்தார். இந்த நிலையில், இந்த விவரம் ராஜஸ்தான் பகுதியில் இருக்கும் இந்திய உளவுத்துறை அதிகாரிகளுக்கு தெரிய வந்த காரணத்தினால் பல நாள்களாக குமாரின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்ட பின்னர், விசாரணைக்காக மே 18 அன்று காவலில் வைக்கப்பட்டு பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மீதான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று மூத்த இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.



# மட்டக்களப்பில் யானையின் தாக்குதலுக்கு அடுத்தடுத்து இரண்டு குடும்பஸ்தர்கள் சாவு

## கொக்கட்டிச்சோலையில் நேற்று; சந்தணமடுவில் முதல் நாள்

(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அடுத்தடுத்து இரண்டு நாள்கள் இடம்பெற்ற யானைத் தாக்குதலில் இருவர் பலியாகியிருக்கின்றனர்.

கடைசியாக, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அடைச்சகல் பிரதேசத்தில் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்தில் பலியான சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

பன்சேனை கிராமத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான வடிவேல்–குணராசா (வயது – 40) என்பவரே நேற்றைய சம்பவத்தில் உயிரிழந்தவராவார். சம்பவ தினத்தன்று தனது வீட்டிலிருந்து அடைச்சகல் பிரதேசத்திற்கு மேய்ச்சலுக்கு சென்ற தனது மாடுகளை அழைத்து வரச்சென்ற போது மறைந்திருந்த யானை தாக்கியதில் இந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனவும் பின்னர் அயலில் மீனிபிடியில் ஈடுபட்டவர்கள் கண்டபின்னர் அவரின் உடலை சம்பவ இடத்தில் இருந்து மீட்டெடுத்து வீட்டுக்கு கொண்டு வந்ததாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இதே சமயம், மட்டக்களப்பு சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்தணமடு ஆற்றுப்பகுதியில் யானை தாக்கியதால் ஒருவர் பலியாகிய சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 20 ஆம் திகதி இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவடிவேம்பு வில்லுக்கொலனி பிரதேசத்தினைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான வைத்தியராசா கோவிந்தராசா (வயது – 37) என்பவரே அச்சம்பவத்தில் பலியாகியுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வெள்ளிக்கிழமை தனது செங்கல் உற்பத்திசெய்யும் இடத்திற்குச் சென்று அங்கு வேலை செய்துவிட்டு, இரவாகியமையால் தான் தங்கியிருக்கும் குடிசைக்குச் சென்று கொண்டிருக்கும்போது காட்டுக்குள் இருந்த யானை இவரைத் தாக்கியுள்ளது. இதனால் படுகாயமடைந்த இவர் அருகில் உள்ளவர்களின் உதவியுடன் செங்கலடி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் மரணமடைந்துள்ளார்.



## காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில்

# வெளிநோயாளர்கள் சிகிச்சை பிரிவு இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டது

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு, காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டுள்ள வெளி நோயாளர் சிகிச்சை பிரிவின் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி.சுகுணன் வைபவ ரீதியாக இதனை ஆரம்பித்து வைத்தார்.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் வெளி நோயாளர் சிகிச்சை பிரிவின் சகல நடவடிக்கைகளும் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக ஒவ்வொரு நோயாளருக்கும் தனித்தனியாக அட்டை சுகாதார அமைச்சினால்வழங்கப்படுகிறது.

இதற்காக வெளி நோயாளர் சிகிச்சை பிரிவுக்கு வரும் நோயாளியொருவர் தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும். சிறுவர்கள் அல்லது குழந்தைகளாயின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது சிறுவர் ஆரோக்கிய விருத்தி பதிவேடு என்பவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.எஸ்.ஜாபீர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு கல்லடி 231 படைப் பிரிவின் பிரிகேடியர் திலீப் பண்டார, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலக சுகாதார தகவல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஆர்.நவலோஜிதன் மற்றும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள்,. தாதியர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.





# சண்டைக் கோழியைக் களவாடி இறைச்சிக்காக வெட்டிய திருடன்

## மொரவெவ பொலிஸார் மடக்கினர்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை – மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீட்டில் வளர்த்து வந்த சண்டைக் கோழியைத் திருடி இறைச்சிக்காக வெட்டிய சந்தேகத்தின்பேரில் ஒருவரைத் தாங்கள் கைது செய்துள்ளோம் எனப்பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் திருகோணமலை–ரொட்டவெவ பகுதியைச் சேர்ந்த 45 வயது நபர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியா பிரதேசத்தில் இருந்து 15 ஆயிரம் ரூபா பெறுமதிக்கு வாங்கி வந்த சண்டைக் கோழியைக் கடந்த இரண்டு நாள்களாகக் காணவில்லையென உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இம் முறைப்பாட்டையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த கோழியை திருடி இறைச்சிக்காக வெட்டிய சந்தேகத்தில் பக்கத்து வீட்டுக்காரரைக் கைது செய்துள்ளனர். அவர் பக்கத்து வீட்டுக்குச் சென்று கோழியைத் தாமே திருடி சென்றேன் எனவும் அதற்கான பணத்தை வழங்குவேன் எனவும் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இருந்தபோதிலும் குறித்த சந்தேக நபருக்கு எதிராக ஏற்கனவே நீதிமன்றத்தில் பல குற்றச்சாட்டுகள் இருப்பதினால் பொலிஸார் பிணை வழங்க மறுத்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.



# காத்தான்குடி நகரில் திடீரென தீப்பற்றி எரிந்த மோ. சைக்கிள்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதான வீதியில் நேற்றுக் காலை 11.00 மணியளவில் வீதியால் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திடீர் எனத் தீப்பற்றி எரிந்துள்ளதாக காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொதுமக்கள் ஒன்றிணைந்து தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த போதிலும் மோட்டார் சைக்கிள் முற்றுமுழுதாக தீயில் எரிந்து சேதமாகியுள்ளது.

பெற்றோல் கசிவினாலேயே இந்தத் தீப்பற்றல் ஏற்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# திருமலையில் டெங்கின் தாக்கம் அதிகரிப்பு கடற்படைத் தளத்தில் மட்டும் 111 நோயாளர்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் தாக்கம் அதிகரித்துள்ளது. மொத்தமாக இந்த வருடம் திருமலை மாவட்டத்தில் 770 டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்டுள்ளனர். இதில் திருகோணமலை கடற்படை தளத்தில் 111 நோயாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர் என திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் வீ.பிரேமானந்த் தெரிவித்தார்.



திருகோணமலையில் உள்ள சுகாதார பணிமனையில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில. –

டெங்கு வீரியம் அதிகரிப்பு உயர் சிவப்பு வலயங்களாக திருகோணமலை, கிண்ணியா, மூதூர், உப்புவெளி, குச்சவெளி போன்ற சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுகள் இணங்காணப்பட்டுள்ளன. இதில் கிண்ணியா சுகாதார பிரிவில் ஆண் (வயது38) ஒருவர் டெங்கு நோய் காரணமாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைத்து மரணித்த சம்பவமும் இடம் பெற்றுள்ளது.

திருகோணமலை பகுதியில் 203, மூதூரில் 203, கிண்ணியா 77, உப்புவெளி 76 என டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்டுள்ளனர். கடந்த வருடம் (2021 இல்) 312 நோயாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில் இம் முறை இதுவரை அது 770 ஆக அதிகரித்துள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் டெங்கு வாரமாக மே 18 தொடக்கம் 24 வரை பிரகடனப் படுத்தியுள்ளது. இந்த நிலையில் சுகாதார தரப்புடன் முப்படையினர் இணைந்து டெங்கு ஒழிப்புப் பணி இடம் பெற்று வருகிறது .

இவ்வாறான கொடிய நோயிலிருந்து பாதுகாக்க பொது மக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும். தங்களது வீடுகள், காணிகளைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பாவிக்காத மலசல கூடங்களை கவனமாக நீர்தேங்காத வண்ணம் சுத்தப்படுத்துவதுடன் வெற்றுக் காணிகளையும் உரிய நேரத்தில் சுத்தமாகப் பேண வேண்டும். அது போன்று பாடசாலைகள், அரச திணைக்களங்களில் தினசரி டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் சுத்தத்தை பேண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொது மக்களை கேட்டுக் கொள்கிறோம்.

காய்ச்சல் ஏற்படுமிடத்து உடனடியாக வைத்தியரை நாடவும். மூன்று நாள்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமாயின் இரத்தப் பரிசோதனையை மேற்கொள்ளவும் இதில் பொறுப்பின்றி இருக்க வேண்டாம் . சில பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு பணியின் போது லாவா குடம்பிகள் காணப்பட்டுள்ளன .

இதில் அவதானமாக மக்கள் செயற்பட வேண்டும். மீண்டும் மீண்டும் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட மாட்டாது. உடன் சட்ட நடவடிக்கைகளை இவ்வாறானவர்களுக்கு எதிராக மேற்கொள்வோம். – என்றார்.

# 3 கிலோ ஹெரோயினுடன் அதுருகிரியவில் மூவர் கைது

அதுருகிரிய மற்றும் பாதுக்கை பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் ஒரு தொகை பணம் உட்பட சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் குற்றத்தடுப்பு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக அதுருகிரிய மற்றும் பாதுக்கை பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 3 கிலோ 300 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் ஒரு கோடியே 79 லட்சத்து 36 ஆயிரத்து 500 ரூபா பணம் உட்பட சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 36, 51 வயதுடைய ஆண்கள் இருவரும் 31 வயதுடைய பெண் ஒருவர் என்றும் அவர்கள் பாதுக்கை மற்றும் மீகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்



# யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் காத்திருப்போர் மண்டபம் திறப்பு!

'சிறைக் கைதிகளும் மனிதர்களே' எனும் தொனிப்பொருளில் யாழ்.சிறைச்சாலையில் காத்திருப்போர் மண்டபமொன்று, யாழ்ப்பாண சிறைச்சாலை முன்றிலில் நேற்று (சனிக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

யாழ் சிறைச்சாலையில் உள்ள தமது உறவுகளைப் பார்வையிட வரும் உறவினர்கள், வெயிலில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை காணப்பட்டது.

யாழ்ப்பாண சிறைச்சாலை அத்தியட்சகரால், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரிடம், காத்திருப்போர் மண்டபம் ஒன்று அமைத்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கமைய யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தியின், முயற்சியால் அறக்கட்டளை நிதியம் ஒன்றின் நிதிப் பங்களிப்பில் காத்திருப்போர் மண்டபம் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது நிகழ்வில் சமாதானத்தை வலியுறுத்தி சமாதானப் புறாவும் பறக்கவிடப் பட்டது.

# சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் இருமணி நேரத்துக்கு முன்பே சமுகமளிக்கவேண்டும்

## நாட்டு நிலைமை காரணமாக பரீட்சைத் திணைக்களம் அறிவிப்பு

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலை காரணமாக இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னதாக பரீட்சை மண்டபத்திற்கு வருவதே பொருத்தமானதாக இருக்கும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை ஊழியர்களுக்கு எரிபொருள் வழங்க விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம்.எம்.டி. தர்மசேன தெரிவித்துள்ளார்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்காக நியமிக்கப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், பரீட்சார்த்திகள் பாடங்கள் தொடர்பாக ஏதேனும் கேள்விகள் இருந்தால் 0112 784 208 அல்லது 0112 784 537 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அனைத்து இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களிலும் பரீட்சார்த்திகளுக்காக பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தனியார் பஸ்களுக்கான எரிபொருளை டிப்போக்களில் இருந்து வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பரீட்சை ஊழியர்களுக்கும் தேவையான எரிபொருள் களஞ்சியசாலையில் இருந்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கீழுழைப்பு பணியாளர்களுக்கு உலருணவுப் பொதிகள்!







ஐக்கிய அமெரிக்காவில் அமைந்துள்ள சிவானந்தன் ஆய்வு கூடத்தின் நிறுவுநரும், ஈழத் தமிழ் விஞ்ஞானியுமான பேராசிரியர் சிவா சிவானந்தனின் நிதியுதவியுடன் யாழ். பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் கீழுழைப்புப் பணியாளர்களுக்கு உலருணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் 110 தொழிலாளர்களுக்கும், கிளிநொச்சி வளாகத்தில் பணியாற்றும் 40 தொழிலாளர்களுக்குமாக 150 பேருக்கும் சுமார் 6 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு. ரவிராஜன், பதிவாளர் வி.காண்டீபன், நிதியாளர் எஸ். சுரேஷ்குமார், பிரதிப்பதிவாளர் எம். கணேசலிங்கம் மற்றும் நலச்சேவைகள் உதவிப் பதிவாளர் எஸ். ஜங்கரன் உட்பட பல்கலைக்கழக அதிகாரிகள் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கினர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.05.2022இல் வெளியிடப்பெற்றது.